**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டிவனம்,**

**முன்னிலை: ஸ்ரீமதி. ம. இளவரசி M.L.,**

**நீதித்துறை நடுவர் எண். I திண்டிவனம்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 -ம் நாள் திங்கள்கிழமை**

**2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 02-ம் நாள்**

**CC. No.175 of 2024**

**(CNR No.TNVP10-05453-2024)**

| | | | |
|---|---|---|---|
| 1) | வழக்கு எண் | : | C.C.No.175/2024 |
| 2 | குற்ற முறையீடுபவர் | : | தமிழ்நாடு அரசு அதன் சார்பாக<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>திண்டிவனம் காவல் நிலையம்,<br>குற்ற எண். 512/2023,<br>இதச பிரிவுகள் 447, 294(b), 323, 324, 506(1),<br>பிரிவு 4 TNPWH Act |
| 3 | எதிரியின் விவரம் | | தமிழரசன், வயது 29,<br>த/பெ ராஜா,<br>சஞ்சீவிராயன்பேட்டை, 6 வது வீதி,<br>திண்டிவனம் |
| 4 | சம்பவ தேதி | : | 01.11.2023 |
| 5 | முறையீடு | : | 02.11.2023 |
| 6 | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த நாள் | : | 02.11.2023 |
| 7 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 16.10.2024 |
| 8 | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | : | 27.01.2025 |

ELAVARASI Digitally signed by ELAVARASI
Date: 2026.03.16 17:23:05 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | ---- | | |
| 10 | சாட்சிகளின் விசாரணை | : | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | | PW-1 | 02.03.2026 | 02.03.2026 |
| | | | PW-2 | 02.03.2026 | 02.03.2026 |
| | | | PW-3 | 02.03.2026 | 02.03.2026 |
| | | | PW-4 | 13.03.2026 | 13.03.2026 |
| 11 | பிரிவு 351(1)(பி) BNSS ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 16.03.2026 | | |
| 12 | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விவரம் | : | இல்லை | | |
| 13 | மேல்முறையீடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை | | |
| 14 | தண்டனை அல்லது உத்தரவு | : | எதிரி மீது இதச பிரிவுகள் 447, 294(b), 323, 324, 506(1), தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) BNSS- ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. | | |
| 15 | காலதாமதத்தின் விளக்கம் | : | ___ | | |

ELAVARASI

Digitally signed by ELAVARASI
Date: 2026.03.16 17:23:11 +0530

இவ்வழக்கானது கடந்த 16.10.2024-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 13.03.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.ஏழுமலை, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களையும் பரிசீலக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்.,

## தீர்ப்புரை

**1) குற்ற அறிக்கையின் சுருக்கம்:-**

திண்டிவனம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சிந்து நகரில் இவ்வழக்கின் சாட்சி -1 ஆன நிர்மலா என்பவர் அவருடைய குடும்பத்தினருடன் வசித்து வந்துள்ளார். சாட்சி -1 ஆனவருக்கும் அதே பகுதியில் வசிக்கும் எதிரியான தமிழரசன் இருவருக்கும் குடும்ப பிரச்சினை ஏற்பட்டதால் அதன் பேரில் வழக்கு பதிவு செய்து அவ்வழக்கானது நிலுவையில் இருந்து வருவதால் அவ்வழக்கை வாபஸ் பெற சொல்லி சாட்சி- 1 ன் குடும்பத்தினரை எதிரியானவர் மிரட்டி வந்துள்ளார். இந்நிலையில் 01.11.2023 அன்று இரவு சுமார் 8.00 மணியளவில் சாட்சி -1ஆனவர் அவரது கணவரான சாட்சி -2 லோகநாதன் மற்றும் அவரது மகனான சாட்சி பிரவீன் ஆகியோர்களுடன் வீட்டிலிருந்போது எதிரி தமிழரசன் குடித்துவிட்டு சாட்சி -1 ன் வீட்டினுள் அத்துமீறி வந்து டேய் தேவிடியா பசங்களா நான் என்ன சொன்னாலும் காதில் வாங்கமாட்டீங்களா என்று அசிங்கமான

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:23:18 +0530

வார்த்தைகளால் திட்டி எதிரி கையில் போட்டிருந்த காப்பால் சாட்சி -3 ன் முகத்தில் மாறி, மாறி ஓங்கி குத்தி சொற்ப காயத்தை ஏற்படுத்தியும் இதனை பார்த்து தடுக்க சென்ற சாட்சி .1 ஐ பெண் என்றும் பாராமல் தாக்கியும், உடனிருந்த சாட்சி -2 ஐயும் தாக்கி சொற்ப காயத்தை ஏற்படுத்தியதால் சாட்சி -1 ஆனவர் எதிரி தமிழரசனிடம் எதற்குடா இப்படி பண்றா என்று கேட்கும்போது வழக்கை வாங்கும் வரை உங்களை விடமாட்டேன் இப்படித்தான் உங்களை அடித்து கொடுமைப்படுத்துவேன் என்று சாட்சிகள் மூவரையும் பார்த்து உங்களை சும்மா விடமாட்டேன் கொலை செய்துபோட போகிறேன் என்று கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்ததாக எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 354, 506(1)- ன்படி திண்டிவனம் காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கானது இதச பிரிவுகள் 294(b), 323, 354, 506(1)- ன்படி ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230-BNSS-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**4)** வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது குற்றச்சாட்டு வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 447, 294(b), 323, 324, 506(1), தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:23:24 +0530

கீழான குற்றச்சாட்டுகள் குறித்து வனைந்து விளக்கி கூறி வினவிய போது எதிரி அவற்றை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறியதால் அரசு தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா. 4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சியம் அளிக்கப்படவில்லை.

**6) வழக்கின் சுருக்கம்**

➔ காயம்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சம்பவம் பற்றியும் புகார் அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

➔ கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 சம்பவத்தை கேள்வியுற்றதாக அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார் .

➔ மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 சம்பவத்தின்போது யாரோ தன்னை பின்னந்தலையில் அடித்துவிட்டார்கள் என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.

➔ காவல் உதவி ஆய்வாளர் அ.சா.4 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

7). அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரியை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரியிடம் பிரிவு 351(1)(ஆ)-ன் BNSS படி வினவியபோது எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தனர். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:23:30 +0530

**8) <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-</u>**

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் இதச பிரிவுகள் 447, 294(b), 323, 324, 506(1), தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

9. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

10. அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.4 சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சாட்சிகள் மூலமாக எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டதால் தக்க தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

11. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் காயம்பட்ட சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.3 ஆகியோர் முரண்பட சாட்சியம் அளித்துள்ளார். மற்ற சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் பிறழ் சாட்சியம் அளித்துள்ளனர். எனவே சந்தேகத்தின் பலனை அளித்து எதிரியை குற்றவாளி அல்ல என தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:23:35 +0530

**12) சாட்சிய பரிசீலனைகளும், தீர்வும் ;**

நிகழ்நிலை புகார்தாரரான **அ.சா.1 திருமதி. நிர்மலா** அவரது சாட்சியத்தில் கடந்த 2023 ம் வருடத்திற்கு முன்னர் ஒருநாள் இரவு சுமார் 7 மணியளவில் தான் வீட்டில் இருந்தபோது எதிரி வீட்டினுள் வந்து தன்னிடம் பேசிக்கொண்டிருந்தபோது எதிரிக்கும், தனக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டதாகவும், அந்த சமயத்தில் தனது மகன் வீட்டில் இருந்தார் எனவும், தனது கணவர் வெளியில் சென்றிருந்தார் எனவும், அந்த சமயம் எதிரி அவரின் கையால் தனது கையில் அடித்தார் எனவும், பின்னர் அங்கிருந்த தனது மகனை ஆஜர் எதிரி கையால் வாயில் அடித்துவிட்டார் எனவும், சத்தம் கேட்டு அக்கம், பக்கம் இருந்தவர்கள் வந்தார்கள் எனவும், அடிபட்ட தன்னையும் தனது மகனையும் தனது கணவர் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் எனவும், பின்னர் சம்பவம் சம்மந்தமாக டவுன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் எனவும், போலீசார் வழக்கு சம்மந்தமாக தன்னை விசாரிக்கவில்லை எனவும், தற்போது சமாதானமாக செல்கிறோம் எனவும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.

13. கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.2 திரு.லோகநாதன்** அவரது சாட்சியத்தில் சுமார் 3 வருடத்திற்கு முன்னர் ஒரு நாள் இரவு சுமார் 8.00 மணியளவில் வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தபோது அக்கம், பக்கம் இருந்தவர்கள் தனது வீட்டில் எதிரிக்கும் தனது மகனுக்கும் பிரச்சினை ஏற்பட்டதாக

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:23:41 +0530

சொன்னார்கள் எனவும், பின்னர் தான் தனது மகனை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தார் எனவும், தனது மகனுக்கு கழுத்து மற்றும் கையில் காயம் இருந்தது எனவும், இதுகுறித்து தனது மகனிடம் கேட்டபோது ஆஜர் எதிரி அடித்துவிட்டதாக சொன்னார் எனவும், போலீசார் வழக்கு சம்மந்தமாக தன்னை விசாரிக்கவில்லை எனவும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.

14. பாதிக்கப்பட்ட மற்றும் கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.3 திரு. பிரவீன்** அவரது சாட்சியத்தில் சுமார் 3 வருடத்திற்கு முன்னதாக ஒரு நாள் இரவு சுமார் 10.30 மணியளவில் தானும், தனது அம்மாவும் வீட்டிலிருந்தபோது கரண்ட் கட்டாகிவிட்டது எனவும், தான் வீட்டிற்கு வெளியில் வந்தபோது இருட்டில் யாரோ தன்னை பின்னந்தலையில் அடித்துவிட்டார்கள் எனவும், தன்னை யார் அடித்தார்கள் என்று தெரியாது எனவும், அதில் தான் மயக்கமாகிவிட்டதாகவும், தனது அப்பா வீட்டிற்கு வந்து தன்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் எனவும், போலீசார் வழக்கு சம்மந்தமாக தன்னை விசாரிக்கவில்லை எனவும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.

15. கூடுதல் சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.4 திரு. முருகானந்தன் காவல் உதவி ஆய்வாளர்** அவரது சாட்சியத்தில் கடந்த 02.11.2023 அன்று 11.45 மணிக்கு திண்டிவனம் காவல் நிலைய ஆய்வாளர் தங்கம் நிலைய

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:23:47 +0530

பொறுப்பிலிருந்தபோது அ.சா.1 நிர்மலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.512/2023 இதச பிரிவுகள் 447, 294(b), 323, 324, 506(1), section 4 of TNPWH Act ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், பின்னர் வழக்கின் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் 13.40 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தீபக்குமார் மற்றும் கலைமணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பின்னர் வழக்கின் சம்பவ சாட்சிகளான நிர்மலா, லோகநாதன், பிரவீன், டில்லிபாபு ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் எனவும், சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிய வர எதிரியை தேட எதிரி அன்றைய தினம் 16.30 மணிக்கு திண்டிவனம் ஆர்.எஸ். பிள்ளை தெருவில் சாட்சிகள் எதிரியை அடையாளம் காட்ட காரணம் கூறி கைது செய்து 17.00 மணிக்கு நிலையம் வந்து திரேக பரிசோதனைக்கு பின் பாராவசம் ஒப்படைத்துள்ளார் எனவும், பின்னர் இந்த வழக்கில் காயம்பட்ட லோகநாதன், பிரவீன்குமார் ஆகியோர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளித்த உதவி மருத்துவர் ராஜேசேகர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று காயச்சான்றிதழ் பெற்றார் எனவும், பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 447, 294(b), 323, 324, 506(1), section 4 of TNPWH Act ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார். அ.சா.3 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:23:52 +0530

16. கடந்த 01.11.2023 அன்று இரவு சுமார் 8.00 மணியளவில் சாட்சி -1 ஆனவர் அவரது கணவரான சாட்சி -2 லோகநாதன் மற்றும் அவரது மகனான சாட்சி பிரவீன் ஆகியோர்களுடன் வீட்டிலிருந்போது எதிரி தமிழரசன் குடித்துவிட்டு சாட்சி -1 ன் வீட்டினுள் அத்துமீறி வந்து அசிங்கமாக திட்டி எதிரி கையில் போட்டிருந்த காப்பால் சாட்சி -3 ன் முகத்தில் மாறி, மாறி ஓங்கி குத்தி சொற்ப காயத்தை ஏற்படுத்தியும் இதனை பார்த்து தடுக்க சென்ற சாட்சி .1 ஐ பெண் என்றும் பாராமல் தாக்கியும், உடனிருந்த சாட்சி -2 ஐயும் தாக்கி சொற்ப காயத்தை ஏற்படுத்தி சாட்சிகள் மூவரையும் பார்த்து கொலை மிரட்டல் விடுத்ததாக அரசு தரப்பு வழக்காகும்,

17. காயம்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சம்பவ சமயத்தில் எதிரி தன்னையும், தனது மகனையும் அடித்து விட்டதாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 க்கும், எதிரிக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்ததாக அ.சா.1 குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் வீட்டில் இருக்கும்போது சம்பவம் நடந்ததாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அ.சா.1 அவரது கணவர் அ.சா.2 சம்பவ சமயத்தில் வீட்டில் இல்லை என குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 ன் கணவரும், அ.சா.3 ன் தந்தையும் கண்ணுற்ற சாட்சியான அ.சா2 சம்பவம் பற்றி கேள்விப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 அவரது மகனுக்கு மட்டும் காயம் ஏற்பட்டதாகவும், அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். மற்றொரு காயம் பட்ட சாட்சியான அ.சா.3, தன்னை யாரோ அடித்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள், எனினும் சம்பவம்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:23:58 +0530

குறித்தும் யார், யாரை தாக்கினார் சம்பவ சமயத்தில் யார், யார் வீட்டில் இருந்தார்கள் என்பது குறித்தும் முரண்பட சாட்சியமளித்துள்ளனர்.

18. காவல் உதவி ஆய்வாளர் அ.சா.4 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி சாட்சியங்களில் இருந்து எதிரி தமிழரசன் குடித்துவிட்டு சாட்சி -1 ன் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து அசிங்கமாக திட்டி எதிரி கையில் போட்டிருந்த காப்பால் சாட்சி -3 ன் முகத்தில் மாறி, மாறி ஓங்கி குத்தி சொற்ப காயத்தை ஏற்படுத்தியதாகவோ, இதனை பார்த்து தடுக்க சென்ற சாட்சி .1 ஐ பெண் என்றும் பாராமல் தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாகவோ கூறப்படும் குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

19. அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள்படியாக இதச பிரிவுகள் 447, 294(b), 323, 324, 506(1), section 4 of TNPWH Act ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**20. இறுதியாக, எதிரி மீது இதச பிரிவுகள் 447, 294(b), 323, 324, 506(1), section 4 of TNPWH Act ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி**

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:24:03 +0530

**நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) BNSS-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

21. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரி எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் அது இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினயில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 -ம் திங்கள்கிழமை 2026-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்து.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:24:08 +0530

நீதித்துறை நடுவர் எண். I,
திண்டிவனம்.

<u>**இணைப்பு:-**</u>

<u>**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**</u>

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி.நிர்மலா | காயம்பட்ட சாட்சி மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.லோகநாதன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.பிரவீன் | காயம்பட்ட சாட்சி மற்றும் கண்ணுற்ற சாட்சி |

| | | |
|---|---|---|
| அ.சா.4 | திரு.முருகானந்தம்<br>காவல் உதவி ஆய்வாளர் | கூடுதல் சாட்சி |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 02.11.2023 | புகார் மனு | அ.சா. 1 |
| அ.சா.ஆ.2 | 02.11.2023 | முதல் தகவல் அறிக்கை | அ.சா. 4 |
| அ.சா.ஆ.3 | 02.11.2023 | பார்வை மகசர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.4 | 02.11.2023 | மாதிரி வரைபடம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.5 | 01.11.2023 | அ.சா.1 ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | அ.சா.4 |
| அ.சா.ஆ.6 | 01.11.2023 | அ.சா.3 ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | அ.சா.4 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:-இல்லை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:24:15 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.